**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள். 24.07.2025

Case No. GWOP.179/2021

P.W. 2

**திருமதி.சத்தியவாணி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

நான் எலக்ட்ரானிக்ஸ் பட்டயப் படிப்பு படித்துள்ளேன். மனுதாரர்கள் கோவில்பட்டி, காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறார்கள். மனுதாரர்கள் எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள். நான் தாமஸ் நகர் வடக்கு தெருவில் வசித்து வருவதாக சொல்லும் நிலையில் இருவருக்கும் ஒரே தெருவில் பக்கத்து பக்கத்து வீடாக எவ்வாறு இருக்க முடியும் என்றால் காளியம்மன் கோவில் தெருவும், தாமஸ் நகர் வடக்கு தெருவும் ஒரே தெரு தான். நான் சொல்லும் முகவரியில் வசித்து வருகிறேன் என்பதற்கு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் கார்டு உள்ளது. அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தினமும் மனுதாரர் வீட்டுக்கு செல்லும் பழக்கம் எனக்கு உள்ளது. மனுதாரர் வீட்டில் நடக்கும் அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் 2ம் மனுதாரரின் சகோதரரின் மனைவி என்றால் சரிதான். எனது கணவர் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் இந்த ஊரில் இல்லை. எனது கணவரை விட எனக்கு இந்த வழக்கில் சிறப்பான அக்கறை இல்லை என்றால் சரியல்ல. நான் அத்தை என்ற முறையில் இறந்து போன வெண்ணிலா என்னிடம் மிகவும் இணக்கமாக இருப்பார். எனது கணவர் இந்து மதத்தை சார்ந்தவர். எனது கணவரின் சகோதரியான 2ம் மனுதாரர் திருமணத்திற்கு முன்பு இந்து மதத்தில் இருந்தார். திருமணத்திற்கு பின் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்டார். அவராகவே விருப்பப்பட்டு தான் மதம் மாறினார். இறந்த வெண்ணிலாவுக்கு வலிப்பு நோய் இருந்தது என்றால் ஒரே ஒரு முறை உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். வெண்ணிலா காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றால் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் தான். திருமணத்திற்கு முன்பு இருவரும் ஒரே இடத்தில் வேலை பார்த்து

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.07.24 15:07:39 +0530

வந்தார்கள். வெண்ணிலா இறக்கும் போது நான்கு மாதம் கர்ப்பமாக இருந்தார் என்பதால் அவரது திருமண வாழ்க்கையில் எந்த தோய்வும் இல்லை என்றால் சரியல்ல. 1வது மனுதாரர் சந்தேகத்தின் பேரில் புகார் அளித்ததால் தான் குற்ற வழக்கே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குடும்ப வன்முறையில் எதிர்மனுதாரர்கள் ஈடுபட்டதாக வெண்ணிலா எப்போது என்னிடம் தெரிவித்தார் என்ற விபரம் பிரமாண வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். அவர் ஊருக்கு வரும் போது என்னிடம் தெரிவித்தார். 2வது மனுதாரர் மூலமாக தான் நான் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 6ல் சொல்லியுள்ள விபரங்களை நான் தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் 2ம் மனுதாரரான மதினி என்னிடம் சொல்லியுள்ளார். எனக்கு நேரடியாக எந்த விஷயமும் தெரியாது என்றால் சரியல்ல. குழந்தை சாய் படிக்கும் விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் அவன் அவனுடைய அப்பாவிடம் தான் இருக்கிறான். குழந்தையை அவர் நல்ல முறையில் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார் என்றால் சரியல்ல. பண்ணைப்பாறையில் உள்ள ஒரு பள்ளியில் குழந்தை படித்து வருகிறான் என்றால் எனக்கு தெரியாது. எனது மதினிக்கு 6 பெண் குழந்தைகள் என்றால் சரிதான். 6 பெண் பிள்ளைகளின் மூலம் ஏற்பட்ட பேரக் குழந்தைகளையும் அவர் பார்த்து வருவதால் அவரிடம் இந்த குழந்தையை கவனிப்பதற்கு போதுமான பொருளாதார வசதி இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் குழந்தையை நல்ல முறையில் பார்த்து, பராமரித்து வருவதால் மனுதாரர்களிடம் குழந்தையை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் தான் இயற்கை பாதுகாவலர் என்பதால் அவரிடம் குழந்தை இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் மனுதாரரின் உறவினர் என்பதால் வழக்கு பற்றிய உண்மையான விபரங்கள் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

RAMANUJAM VASANTHI
Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.07.24 15:07:44 +0530

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.07.24 15:07:51 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**